# சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை – கடன்கள்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நிதிசார் நுகர்வோர் பாதுகாப்பு வழிகாட்டல்களின் பிரகாரம், SDB வங்கியிடமிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய, உங்களுக்கு பொருத்தமான மற்றும் அவசியமான வங்கியியல் தீர்வுகள் மற்றும் சேவைகளை தெரிவு செய்து கொள்வதற்கு உங்களுக்கு உதவும் வகையில் பிரதான தரவு ஆவணங்கள் (KFDs) தொடரை நாம் தயார்ப்படுத்தியுள்ளோம். தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்தக்கூடிய கணக்குகளுடன் தொடர்புடைய விசேட பக்கேஜ்கள் அடங்கலாக பல்வேறு இலங்கை ரூபாய் கணக்கு வகைகள் பற்றிய மேலோட்டமான அம்சங்கள் இந்த KFD இனால் வழங்கப்படுகின்றது. எவ்வாறாயினும், இந்த KFD இல் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் மாற்றங்களின் பிரகாரமும், வங்கியின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களின் பிரகாரமும் மெருகேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். உங்களுக்கு மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால் எமது 24 மணி நேர அழைப்பு நிலைய இலக்கமான 011 5 411 411 உடன் தொடர்பு கொள்ளவும், அல்லது www.sdb.lk எனும் இணையத்தளத்தைப் பார்வையிடவும். உங்கள் கணக்குகள் பற்றி ஏதேனும் முறைப்பாடுகளை கொண்டிருந்தால், முறைப்பாட்டுடன் சுருக்கமான எழுத்துமூல அறிக்கையை, முறைப்பாடுகள் தீர்க்கும் அதிகாரி, SDB வங்கி பிஎல்சி, எட்மன்ட்ன் வீதி, கிருலப்பனை, கொழும்பு 6 எனும் முகவரிக்கு அனுப்பவும் அல்லது [+94(0) 11 5 411 411] எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது [customercare@sdb.lk] எனும் மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்பு கொள்ளவும், நாம் பொருத்தமான வகையில் பதிலளிப்போம்.

| கணக்கின் விளக்கம | வாடிக்கையாளர்களுக்கான அனுகூலங்கள | வட்டி வீதத்தின் வகை | வட்டி வீத மீளாய்வு காலம | கட்டணங்கள் மற்றும் இதர வங்கிக் கட்டண வகைகள் | கணக்கை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள் (தகைமை.:.தேவையான ஆவணங்கள்/எவ்வாறு விண்ணப்பிப்பது) | பிரதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை தொழிற்படு மூலதனம் மற்றும் மூலதன செலவுகள் கடன்கள் கவனத்தில் கொள்ளப்படலாம். | விவசாய சேவைகள்/ தொழிற்துறைகள் மற்றும் உற்பத்தி போன்ற பிரதான மொத்த தேசிய உற்பத்தி துறையில் ஈடுபட்டுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களின் மூலதன செலவுகள் மற்றும் தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் நிதி வசதிகள். | *வங்கியின் சொந்த நிதியாயின் (பத்திர வீதங்கள்)<br>*காணப்படும் மீள்நிதியளிப்பு திட்டங்கள் மற்றும்<br>*நிலையான மற்றும் மிதப்பு பொருத்தமாகும் (AWPLR மற்றும் உள்ளக வீதங்கள் பொருத்தமானதாக அமைவதுடன், வங்கியின் இணையத்தளத்தினூடாக பொது மக்களுக்கு உள்ளக வீதங்கள் அறிவிக்கப்படும்.) | இலங்கை மத்திய வங்கியினால் அறிவிக்கப்படும் AWPLR இன் பிரகாரம் மற்றும் நிதியளிப்புக்காக பயன்படுத்தப்படும் கடன் வசதிகளின் அடிப்படையில் வட்டி வீதங்கள் மாற்றமடையும். | * ஆவணப்படுத்தல்<br>* மதிப்பாய்வு<br>* CRIB<br>* கடன் மீளாய்வு<br>* பொருத்தமான உறுதி/ அடைமான பத்திரம் மற்றும் இதர சட்டபூர்வ கட்டணங்கள்<br>* காப்புறுதி கட்டணங்கள் (வசதிக்கான கட்டணங்களை தீர்மானிப்பதற்கு வங்கிக் கட்டணங்கள் தொடர்பான பொது சுற்றறிக்கை அடிப்படையாகக் கொள்ளப்படும்)<br>* மேலதிக தகவல்களுக்கு “கட்டணங்கள் மற்றும் கூலிகள்” ஆவணத்தை இணையத்தளத்தில் பார்க்கவும். | * வாடிக்கையாளரின் பிரேரணையின் ஆரம்ப தகைமை பரிசோதிப்பு.<br>* திட்டம்/நோக்கத்தின் அடிப்படையில் வங்கிக்கு வாடிக்கையாளரினால் அவசியமான சகல ஆவணங்களும் வழங்கப்படல்.<br>* கிளை முகாமையாளர் அல்லது பொறுப்பானவரினால் முறையான கள மதிப்பாய்வை முன்னெடுத்து நோக்கத்தை உறுதி செய்தல்.<br>* வாடிக்கையாளரின் தற்போதைய மற்றும் எதிர்கால பணப்பாய்ச்சலின் அடிப்படையில் முறையான நிதிசார் பகுப்பாய்வை வங்கி முன்னெடுத்தல்.<br>* கிளையினால் பிரேரணை பதிவேற்றப்படல்.<br>* CCD மதிப்பாய்வு<br>* இடர் மதிப்பாய்வு (அவசியமாயின்)<br>* அனுமதி<br>* CAU செயற்பாடுகள்<br>* கடன் வழங்கல்கள். | * சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை மற்றும் அது சார் தீர்வுகளுக்கு ஒவ்வொரு கடன் கணக்குதாரருக்கு U pay மற்றும் டெபிட் கார்ட் அறிமுகம் செய்வது கண்டிப்பானதாகும்.<br>* வியாபாரங்கள்/வாடிக்கையாளர்களுக்கு இயலுமானவரை UPOS அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.<br>* வசதி அல்லது திட்டத்தின் தன்மையின் பிரகாரம் பிணைகள் மற்றும் இதர விசேட ஏற்பாட்டு நிபந்தனைகள் பொருத்தமானதாக அமையும்.<br>* கடன் விண்ணப்ப பதிவின் போது e-கையொப்பத்துக்கான உறுதி ஆணை பெறப்பட வேண்டும். |
| 2. நிலையான வட்டி வீதங்கள மாத்திரம் அனுமதிக்கப்படும் மற்றும் தொழிற்படு மூலதன கடன்கள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படும். | | | | | | |
| 3. பருவ காலத்துக்கானது | குறித்த பருவகாலங்களுக்கான விவசாய பொருளாதார மற்றும் விவசாயசாராத துறைகளின் குறுகிய கால நிதித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான உதவி. | | | | | * ஒவ்வொரு கணக்குதாரருக்கும் U pay மற்றும் டெபிட் கார்ட அறிமுகம் செய்வது கண்டிப்பானதாகும்.<br>* வியாபாரங்கள்/வாடிக்கையாளர்களுக்கு இயலுமானவரை UPOS அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.<br>* விவசாய செய்கை நோக்கத்துக்கான கடன்கள் - பயிர் செய்ய எதிர்பார்க்கப்படும் காணியின் உரிமையாளராக வாடிக்கையாளர் இருப்பது உகந்தது. பயிர் செய்யப்படவுள்ள காணியின் உரிமையாண்மை வாடிக்கையாளரிடம் காணப்படாதவிடத்து, காணி உரிமையாளரிடமிருந்து, அனுமதியளிப்புக்கான ஆதாரத்தை உறுதி அல்லது குத்தகை உடன்படிக்கையினூடாக சமர்ப்பிக்க முடியாத நிலையில்,<br>- 1 மில். வரை – கடந்த 3 வருடங்களாக குறித்த காணியில் பயிரிடப்படுகின்றமை தொடர்பான உறுதிப்படுத்தலை கிராம சேவகர் மற்றும் பிரதேச AI இடமிருந்து பெற்று சமர்ப்பித்தல்.<br>- 2 மில். வரை - கடந்த 5 வருடங்களாக குறித்த காணியில் பயிரிடப்படுகின்றமை தொடர்பான உறுதிப்படுத்தலை கிராம சேவகர் மற்றும் பிரதேச AI இடமிருந்து பெற்று சமர்ப்பித்தல்.<br>* சகல விவசாய பண்ணை செயற்திட்டங்களுக்கும் - AI சான்றிதழ் பெறப்படுவது ஊக்குவிக்கப்படுகின்றது.<br>* மீளச் செலுத்தும் நியதிகள், மீளச் செலுத்தும் காலம், தேவையான தொகை, கடன் வழங்கல் நியதிகள் மற்றும் செயற்திட்டத்தின் வருமானம போன்றன பயிர், பயிர் வகை,பயிர் இடைவெளி போன்றவற்றில் தங்கியிருக்கும்.<br>* கடன் விண்ணப்ப பதிவின் போது e-கையொப்பத்துக்கான உறுதி ஆணை பெறப்பட வேண்டும். |

SDB வங்கி

#உங்களைமதிக்கும்

சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ. இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ [lka] , Reg. No: PB62PQ